**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ESTABLISHMENT OF ROUGH STONE QUARRY OWNED BY THIRU.A.SUBRAMANIAM IN AN EXTENT OF 1.21.50 HECTARES AT S.F.NO: 834/2 PART, SOKKANUR VILLAGE, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT ON 09.09.2025 AT 11.00 A.M. IN M/S. MKK SRI MUTHUKUMARAN MAHAL, MUTHUGOUNDANUR VILLAGE, PALARPATHY POST, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT.**

| | | |
|---|---|---|
| 1. **Tmt. K.SENTHIL VADIVU** | : | **Special District Revenue Officer, (Land Acquisition) State Highways, Coimbatore** |
| 2. **Dr. C.R.SATHISH KUMAR** | : | **District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South** |

**PROJECT PROPONENT**

| | | |
|---|---|---|
| 1. **Thiru. A.Subramaniam** | : | **The Proprietor,<br>A.Subramaniam Rough Stone & Gravel Quarry,<br>Sokkanur Village,<br>Kinathkadavu Taluk,<br>Coimbatore District** |
| 2. **Thiru. Shaik Nawas** | : | **EIA Consultant,<br>M/s. GEO Exploration and Mining Solutions, Salem.** |

Public attended – 75 Nos. (List enclosed)

At the outset, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Coimbatore South has welcomed the Special District Revenue Officer (Land Acquisition), State Highways/Coimbatore, Environmentalists, NGOs and the public present in the public hearing meeting conducted on behalf of Tamilnadu Pollution Control Board. He informed that the unit of Thiru A. Subramanaiam Rough Stone & Gravel quarry has proposed to be located at S.F.No: 834/2 Part, Sokkanur Village, Kinathukadavu Taluk, Coimbatore District in an extent of 1.21.50 Hectares. The extent of proposed quarries nearby is 3.01 ha and the extent of existing quarry is 1.21.0 Ha. Since, the total extent of all the quarries is above 5 Ha, the quarry proponent has obtained ToR from the SEIAA as per the Environment Impact Assesment Notification No. S.O 1533 dated 14.09.2006. As per the ToR obtained, the Environment Imapct Assessment report to be prepared and public hearing to be conducted.

The detailed study report on Environment Impact Assesment relating to the establishment of proposed quarry project would be presented by the EIA Consultant

through power point presentation to the public. He has requested the public to provide their views, opinions and suggestions about the proposed project after mentioning their name and place of their nativity. He informed that all the views and suggestions raised by the public in the meeting would be recorded in both audio and video and the same would be submitted to the State Environment Impact Assessment Authority.

The Special Revenue Officer (Land Acquisition), State Highways, Coimbatore has requested the project proponent and their EIA Consultant to present their proposed project details to the public through the power point presentation in detail.

The EIA consultant of the project has welcomed all the gatherings and briefed about the proposed project with the help of power point presentation. He detailed the environmental factors and its impacts on the Environment such as Land, Soil, Water, Air and Noise due to the proposed project in the said location. He also detailed about the Ambient Air Aquality survey conducted within the core zone of 500 m radius and Water samples collected on surface water and Borewell and the openwell within the core zone of 500 m radius from the proposed project.

After the technical presentation of the consultant, the District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Coimbatore South has requested the public present in the meeting to express their views, opinions, apprehensions and suggestions regarding environmental issues about the proposed quarry project.

Accordingly, the following village public and the Environmentalists have raised comments and suggestions in the public hearing meeting. The views and suggestions of the public are detailed as below.

1. **Thiru. Ramakrishnan, Sokkanur Village, Kinathukadavu Taluk:**
   He stated that he is doing vegetation for the past five years in his agriculture land of 3 acres located nearby to the existing quarries and there is no hindrance for their agriculture activity due to the operation of existing quarries and they have no issues on utilizing the water. He requested to permit the said proposed quarry.

2. **Thiru. Muthuramalingam, Palarpathy Village, Kinathukadavu Taluk:**
   He stated that welfare activities would have been provided to the village if the proposed quarry got permmited. Since, the quarry is getting approvals in Enviromental aspects as necessitated; he has no objection for the quarry activity.

3. **Thiru. Gnanaprakasam, Veerappagoundanur Village, Kinathukadavu Taluk:**
   He stated that he is doing vegetation in his agriculture land of 2 acres and has no objection for the proposed quarrying activity.

4. **Thiru. Harikrishnan, Veerappagoundanur Village, Kinathukadavu Taluk:**

He stated that he is having agriculture land of 5 acres and has no objection for the proposed quarrying activity. He also informed that the environment in the surrounding is good.

5. **Thiru. Thirunavukkarasu, Muthugoundanur Village, Kinathukadavu Taluk:**
He stated that he had been the President of Sokkanur Village Panchayat. They have no development works in the village after Covid pandemic for two years. During that time, they have carried out deveolopmental activities in their Village Panchayat only with the funds collected from the house tax and water tax.
He also informed that they have collected 4 Crores from the existing quarries and carried out major development activities in his village panchayat. He has no objection for the proposed quarry. However, he said that the Governmnet officials should monitor the violations of quarry if any. He had also been the Union President and said that, even now, there is no income for 4 or 5 villages. But due to the fund raised from existing quarries, they had fulfilled the needs of village public. He also opined that the quarry is necessary for their Village so that they can utilize the quarry fund for developmental activities in their village, as there is no other source of income for the Village Panchayat. Hence, he said that has no objection for the quarry and extended his support to the quarry.

6. **Thiru. Kalimuthurajan, Muthugoundanur Village, Kinathukadavu Taluk:**
He stated that he was a former Village President and as said by the earlier Village President, they could not able to give salary to Waterman working for Panchayat. They could not even provide borewell facility during the period 2001-2006. In such situation, first quarry was permitted in the Sokkanur village and the Panchayat had collected Rs. 40,000/- from the quarry and the same was spent for giving salary to waterman. Due to insufficient fund, they had never been paid the EB bill for the Village Panchayat. Now, the Village Panchayat said that they have collected Rs. 40 Lakhs as revenue and the same was utilized to provide concrete roads and drainage facilities. Similarly, the quarry proponents have given required help to the extent. Hence, he said that has no objection for the quarry.

7. **Thiru. Nithyananthan, Veerappagoundanur Village, Kinathukadavu Taluk:**
He stated that he is a resident of Veerappagoundanur village and he has no objection for the proposed quarry.

8. **Thiru. Ramasamy, Veerappagoundanur Village, Kinathukadavu Taluk:**
He stated that he is having 5 acres of land in Veerappagoundanur village and he has no objection for this quarry project.

9. **Thiru. Sathish, NGO:**
He introduced himself as an Environmnet protector and requested the Government to resolve the issues of public and shall provide empolymnet for the sustainable

development. He also requested the Governmnet officials to provide permanent houses to the public. He requested the Proprietors to develop and protect the trees. Finally he requested the Governmnet officials to give permission to the quarry without any limitations.

**10. Thiru. Uthirakumar, Muthugoundanur Village, Kinathukadavu Taluk:**

He stated that nobody would get affected, if the quarry is get permitted and he has no objection for the proposed quarry.

**11. Thiru. Thirunavukkarasu, Muthugoundanur Village, Kinathukadavu Taluk:**

He again stood and stated that while granting licence to quarry, the Government instructed the quarry to provide development activities in schools and hospitals and therefore he welcomed the same. He also informed that, due to the existence of quarries, their village schools and hospitals have got benefitted such as Thiru. Kalimuthuraj have utilized Rs. 60000/- towards development activities in Sokkanur Hospital and Thiru. Uthirakumar had spent Rs. 65000/- towards development activities in Muthugoundanur High school. Hence, he expressed his gratitude to the project and said that he has no objection for the quarry project.

**<u>The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Coimbatore South</u>:**

He requested the public again to present their views and suggestions if any in written form.

**12. Thiru. Rajasekar, Veerappagoundanur Village, Kinathukadavu Taluk:**

He stated that their livelihood is solely dependent on the operation of quarries.

**13. Thiru. Thangavel, Sattakalputhur Village, Kinathukadavu Taluk:**

He stated that, earlier they ought to go to Kinathukadu, Velanthavalam up to 12 km to reach the petrol bunk. Whereas, at present they are having petrol bunk nearby only after the existence of quarries.

The Special District Revenue Officer (Land Acquisition), State Highways, Coimbatore has also requested the public present in the meeting to air their views regarding their opinions, apprehensions and suggestions regarding environmental issues about the proposed quarry project. After that, she thanked all the public who attended the meeting.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has informed that the suggestions, views and opinion of the public will be recorded as such and sent to the SEIAA and the MoEF & CC. Finally, he thanked the public gathered with which the public hearing came to an end.

The list of public attended the public hearing meeting along with the Audio and Video of the entire proceeding is also enclosed.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Coimbatore South**

**Special District Revenue Officer**
**State Highways, Coimbatore**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் கிராமத்தில் திரு.A. சுப்பிரமணியம் அவர்களுக்கு சொந்தமான க.ச.எண். 834/2 (பகுதி)-இல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், பாலார்பித அஞ்சல், முத்துக்கவுண்டனூர் கிராமத்தில் உள்ள தி/ள். எம்கேகே ஸ்ரீ முத்துக்குமரன் மஹாலில் 09.09.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர் :

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. K. செந்தில் வடிவு | தனி மாவட்ட வருவாய் அலுவலர், (நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலைகள், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr.C.R.சதீஷ் குமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு. |

திட்ட ஆலோசகர்கள்:

| | | |
|---|---|---|
| 1 | திரு.A. சுப்பிரமணியம் | உரிமையாளர், A. சுப்பிரமணியம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி சொக்கனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | திரு.M.ஷேய்க் நவாஸ் | திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், தமிழ்நாடு. |

கலந்து கொண்ட பொதுமக்கள் எண்ணிக்கை - 75 (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

துவக்கத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக, பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு), மாநில நெடுஞ்சாலைகள், கோயம்புத்தூர் அவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் வரவேற்றார்.

அவர் கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் கிராமத்தில் க.ச.எண். 834/2 (பகுதி)-இல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.A. சுப்பிரமணியம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் பரப்பளவு 1 . 21 .5 ஹெக்டர்ஸ் ஆகும் என தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் பரப்பளவு 3.01 ஹெக்டர் மற்றும் ஏற்கனவே அமைந்துள்ள குவாரியின் பரப்பளவு 1. 21.0 ஹெக்டர். மேற்படி நிலங்களின் மொத்த பரப்பளவு 5 ஹெக்டருக்கு அதிகமாக இருப்பதால், திட்ட ஆதரவாளர்கள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு S.O. 1533 நாள் 14.09.2006 இன்படி அனுமதி பெற வேண்டியுள்ளது. அந்த வரையறுக்கப்பட்டுள்ள வரைமுறைகளின்படி சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்ய இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் கட்டுமானம் தொடர்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த விவரமான ஆய்வு அறிக்கை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் அவர்களால் காணொளி காட்சி மூலம் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் குறித்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை தங்களது பெயர் மற்றும் வசிக்கும் இடத்தினை குறிப்பிட்ட பின் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், பொதுமக்களால் இக்கருத்துக் கேட்புக் கூட்டம் குறித்து தெரிவிக்கப்படும் கருத்து மற்றும் பரிந்துரைகள் ஒலி வடிவத்திலும் காணொளி காட்சியாகவும் பதிவு செய்யப்பட்டு, அப்பதிவானது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு), மாநில நெடுஞ்சாலைகள், கோயம்புத்தூர் அவர்கள், திட்ட ஆதரவாளர் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் அவர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு காணொளி காட்சி மூலம் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் வருகை புரிந்துள்ள அனைவரையும் வரைவேற்று, காணொளி காட்சி மூலம் திட்டம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், மேற்படி திட்டம் அமையவுள்ள இடத்தில் உள்ள சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் இத்திட்டத்தினால் நிலம், மண், நீர், காற்று மற்றும் ஒலி போன்ற சுற்றுச்சூழல் காரணிகளுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும்,

இத்திட்டம் அமையவுள்ள இடத்தை சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் காற்றின் தரம் அறியும் சோதனை நடத்தப்பட்டது மற்றும் இத்திட்டம் அமையவுள்ள இடத்தை சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ள நீர்நிலைகள், திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் குறித்து விபரமாக தெரிவித்தார்.

திட்ட ஆலோசகரின் இந்த தொழில்நுட்ப விளக்கக் காட்சிக்கு பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள பொதுமக்கள் தங்களது கருத்துக்கள், அச்சங்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன்படி, கீழ்க்கண்ட கிராம பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்கினர். அவர்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் கீழ்க்கண்டவாறு விரிவாக வழங்கப்படுகிறது.

<u>1.திரு. ராமகிருஷ்ணன், சொக்கனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்</u>

ஏற்கனவே அமைந்துள்ள குவாரிக்கு அருகில் அமைந்துள்ள எங்களது 3 ஏக்கர் விவசாயத்தில் 5 ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டு இருக்கிறேன். அதனால் எங்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை. தண்ணீர் எடுத்து பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். எந்த பாதிப்பும் இல்லை. அதனால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

<u>2. திரு.முத்துராமலிங்கம், பாலர்பதி கிராமம், கிணத்துக்கடவு வட்டம்</u>

இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் நமது பஞ்சாயத்து பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் நல்லபடியாக செய்து கொடுத்த இயலும். சுற்றுப்புற சூழலுக்கு தகுந்த மாதிரி அனுமதி பெற்று செய்வதால் எனக்கு எந்த வித ஆட்சேபணைக்கும் இடமில்லை என தெரிவித்தார்.

3. <u>திரு.ஞானபிரகாசம், வீரப்பகவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்</u>

நான் வீரப்பகவுண்டனூரில் 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறேன். இந்த குவாரி அமைவதால் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

4. <u>திரு. ஹரிகிருஷ்ணன், வீரப்பகவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்</u>

நாங்கள் 5 ஏக்கர் விவசாய பூமி வைத்துள்ளோம். இந்த குவாரி அமைவதால் எங்களுக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை. சுற்றுப்புறம் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. என தெரிவித்தார்.

5. <u>திரு. திருநாவுக்கரசு , முத்துக்கவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்</u>

நான் கடந்த 5 ஆண்டு காலமாக சொக்கனூர் ஊராட்சி மன்ற தலைவராக பதவி வகித்துள்ளேன். கொரோனா பாதிப்பிற்கு பின்னர் இரண்டு வருடம் எந்த முன்னேற்றமும் இல்லை. . அந்த சமயத்தில் வசூலிக்கப்பட்ட வீட்டு வரி மற்றும் தண்ணீர் வரி தொகையைக் கொண்டு மட்டும் அந்த கிராம பஞ்சாயத்தில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என தெரிவித்தார். மேலும், இந்த கிராம பஞ்சாயத்தில் அமைந்துள்ள குவாரிகள் மூலம் கிடைத்த 4 கோடி ரூபாயை வைத்துத்தான் பெரிய அளவிலான முன்னேற்ற நடவடிக்கைகள் இப்பகுதியில் எடுக்கப்பட்டது. குவாரி இப்பகுதியில் அமைவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனினும், குவாரிகளில் விதிமீறல்கள் இருக்கிறதா என்று அரசு அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர் தொழிற்சங்க தலைவராகவும் இருந்ததாகவும், இப்பொழுது கூட 4 அல்லது 5 கிராமங்களுக்கு எந்த வித வருவாயும் இல்லை எனவும் தெரிவித்தார். ஆனால், ஏற்கனவே உள்ள குவாரிகள் மூலம் கிடைக்கப்பட்ட வருவாயைக் கொண்டு கிராமத்தில் உள்ள பொதுமக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது. மேலும், அவர் இந்த கிராமத்திற்கு குவாரி அவசியம் எனவும் வேறு வருவாய் எதுவும் இல்லாத காரணத்தால், அந்த குவாரி மூலம் வரும் வருவாயைக் கொண்டு தான் இந்த கிராமத்தின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். அதனால் குவாரிக்கு அமைய எந்த ஆட்சேபணையும் இல்லை. குவாரிக்கு ஆதரவு தருகிறோம் என தெரிவித்தார்.

6. திரு. காளிமுத்து ராசன், முத்துக்கவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்

நான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். இதற்கு முன்னர் ஊராட்சி மன்றத் தலைவர் சொன்னது போல் நம்ம பஞ்சாயத்தில் வாட்டர் மேனுக்கு கூட சம்பளம் கொடுக்க முடியாத அளவிற்கு தான் பஞ்சாயத்து நடந்து கொண்டு இருக்கிறது. 2001 முதல் 2006 வரை போர் போடக்கூட முடியாத சூழ்நிலை பஞ்சாயத்தில் இருந்தது. இந்த சூழ்நிலையில், முதல் குவாரிக்கு இந்த சொக்கனூர் கிராமத்தில் அனுமதி அளிக்கப்பட்டு அதன் மூலம் ஊராட்சிக்கு 40 ஆயிரம் ரூபாய் வருமானம் வந்தது. அந்த வருமானத்தைக் கொண்டு வாட்டர் மேன்-க்கு சம்பளம் கொடுத்துக் கொண்டு இருந்தோம். சரியான வருமானம் இல்லாததால் இந்த பஞ்சாயத்தில் மின்சார கட்டணம் கட்ட முடியாத சூழ்நிலை இருந்தது. தற்போது. கிராம ஊராட்சியில் ரூபாய் 40 இலட்சம் வருவாய் வசூலிக்கப்பட்டு அத்தொகையானது கான்கிரீட் ரோடு மற்றும் சாக்கடைகள் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல், குவாரி ஆதரவாளர்கள் தேவையான உதவிகளை வழங்கியுள்ளனர். அதனால் குவாரி வருவதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்தார்.

7. திரு. நித்தியானந்தன், வீரப்ப கவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்:

நான் வீரப்பனூரைச் சேர்ந்தவன் தான். எனக்கு இந்த குவாரி அமைவதில் எந்த வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்தார்.

8. திரு. ராமசாமி, வீரப்பகவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்:

வீரப்பகவுண்டனூரில் எனக்கு 5 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றும் குவாரி வருவதால் எந்த வித ஆட்சேபணையும் இல்லை. கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என தெரிவித்தார்.

9. திரு. சதீஷ், அரசு சாரா நிறுவனம்:

நான் ஒரு சுற்றுச்சூழல் பாதுகாவலர் என அறிமுகப்படுத்திக் கொண்டு, பொதுமக்களின் பிரச்சினைகள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றை அளித்து பொதுமக்களின் வளர்ச்சிக்கு

நடவடிக்கை எடுக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டார். அருகில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகளை கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். குவாரி உரிமையாளர்கள் மரங்களை வளர்த்து பாதுகாக்குமாறு கேட்டுக் கொண்டார். இறுதியாக. உரிமையாளர் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்காமல் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

10. திரு. உத்திரகுமார், முத்துக்கவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்:

இந்த குவாரி வருவதால் யாருக்கும் பாதிப்பு வராது. குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை. என தெரிவித்தார்.

11. திரு. திருநாவுக்கரசு, முத்துக்கவுண்டனூர் கிராமம், கிணத்துக்கடவு வட்டம்:

அரசு குவாரிக்கு அனுமதி வழங்கும்பொழுது பள்ளி மற்றும் மருத்துவமனையின் முன்னேற்றத்திற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க அறிவுறுத்துவதால். இத்திட்டத்தை குவாரிகள் இருப்பதால் அப்பகுதியில் உள்ள பள்ளி மற்றும் மருத்துவமனைகள் பயனடைகின்றன. அதாவது. திரு. காளிமுத்து ராஜ் அவர்கள் சொக்கனூர் மருத்துவமனையின் முன்னேற்றத்திற்கு ரூ. 60000 மற்றும் திரு. உத்திரகுமார் சொக்கனூர் முத்துக்கவுண்டனூரில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 65000 செலவு செய்துள்ளனர். எனவே. அவர் இத்திட்டத்திற்கு நன்றி கூறி இக்குவாரி அமைவதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு

பொதுமக்கள் யாராவது எழுத்துப் பூர்வமாக கருத்துக்களை தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம் என கூறினார்.

12. திரு. ராஜசேகர், வீரப்பகவுண்டனூர், கிணத்துக்கடவு வட்டம்:

எங்கள் வாழ்வாதாரமே இந்த குவாரியின் இயக்கத்தை பொறுத்துத் தான் உள்ளது என தெரிவித்தார்.

13. திரு. தங்கவேல், சட்டக்கல்புதூர், கிணத்துக்கடவு வட்டம் :

இந்த குவாரி வரும் முன் நாங்க பெட்ரோல் அடிக்க பங்கிற்கு கிணத்துக்கடவு, வேலந்தாவளம் என்று 12 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருந்தது. இந்த குவாரிகள் அமைந்துள்ளதால் தற்போது அருகிலேயே பங்க் இருப்பதால் சௌகரியமாக இருக்கிறது. என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர, (நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலைகள், கோயம்புத்தூர் அவர்கள் இத்திட்டம் தொடர்பாக வேறு யாராவது கருத்து சொல்ல இருந்தால் தெரிவிக்கலாம் என கேட்டுக் கொண்டார். பின்னர், இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் அவர்கள் கூறியபடியே பதிவு செய்து அக்காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகள் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படும் என தெரிவித்தார். இறுதியாக, மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு கூட்டம் இனிதே முடிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்களின் எண்ணிக்கை விபரம், கூட்ட நடவடிக்கைகள் முழுவதும் அடங்கிய ஒலி மற்றும் காணொளி காட்சி பதிவுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

19/9/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கோயம்புத்தூர் தெற்கு.

19/9/2025

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலைகள்
கோயம்புத்தூர் மாவட்டம்